Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.246/2015

**Depositions of PW- 5**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.சின்னத்தம்பி | Occupation | கூலி வேலை |
| Father's name | ஆரியங்காவு | Calling | |
| Village | முகவூர் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 01st day of June 2026.

01.06.2026

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது முகவூரில் குடியிருந்து வருகிறேன். நான் கல்யாண தரகராக வேலை செய்து வருகிறேன். அசா.1 ஐ எனக்கு தெரியாது. ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. எனக்கு பிரகாசியம்மாள் என்பவரை கல்யாண தரகராக வேலை செய்தபோது தெரியும். இவ்வழக்கு சம்மந்தமாக வேறு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்கக்கோரி அரசு தரப்பில் அனுமதி கேட்டதன் பேரில் அனுமதிக்கப்பட்டு சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

**அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை—**

நான் போலீசார் விசாரணையின்போது திருவில்லிபுத்தூர் கல்யாண தரகராக வேலை செய்தபோது பிரகாசியம்மாள் என்பவரை தெரியும் என்றும் பிரகாசியம்மாள் அவர்சம்பாதித்த பணம் மூலம் 1993ம் வருடம் அவர்குடியிருந்த சர்வே எண்1054/1 கதவு எண்.143A பழைய கதவு எண் 53A கொண்ட 632.5 சதுர அடி காலி இடத்தை கிரையமாக வாங்கியதாக சொன்னார் என்றும் அவரது மகளான ஆக்னஸ்

என்பவருக்கும் எதிரிக்கும் தொடர்பு ஏற்பட்டது என்றும் மேற்படி எதிரி பிரகாசியம்மாள் வசித்து வரும் வீட்டை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் செயல்பட்டுவருவதாக பிரகாசியம்மாள் என்னிடம் கூறினார் என்றும் கடந்த 09.07.2012 ம் தேதி இரவு 08.00 மணியளவில் நானும் பாப்பா என்பவரும் பிரகாசியம்மாள் வீட்டிற்கு சென்றோம் என்றும் பிரகாசியம்மாள் வீட்டை பூட்டி வைத்திருந்தேன் யார் பூட்டை உடைத்தது என்று கேட்டார் என்றும் அப்போது வீட்டிற்குள் இருந்த சுப்பிரமணி வெளியே வந்து பிரகாசியம்மாளை பார்த்து உனக்கு என்ன வீடு என்று சொல்லி வாக்குவாதம் செய்தார் என்றும் இது சம்மந்தமாக நான் இன்னாசிமுத்துவிற்கு தொலைபேசி மூலம் தகவல் சொன்னதன் பிரகாரம் போலீசாரிடம் புகார் கொடுத்ததாக தெரிந்துகொண்டேன் என்றும் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.